இனிமையான குழந்தைகளே! சத்குருவின் முதன்மையான ஸ்ரீமத்-ஆத்ம அபிமானியாகுங்கள், தேக அபிமானத்தை விடுங்கள்.

கேள்வி: குழந்தைகள் உங்களுக்கு இந்த நேரம் எந்த விதமான ஆசையோ, விருப்பமோ இருக்க முடியாது, ஏன்?

பதில்: ஏனென்றால், நீங்கள் அனைவரும் வானப்பிரஸ்திகள், இந்த கண்களால் எதையெல்லாம் பார்க் கின்றோமோ அவை அனைத்தும் வினாசமாகும் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். இப்பொழுது உங்களுக்கு எதுவும் தேவையில்லை, முற்றிலும் பிச்சைக்காரர் ஆக வேண்டும். ஏதேனும் விலை உயர்ந்த பொருளை பயன்படுத்தினால், அது உங்களை தன்வசம் ஈர்க்கும். பிறகு தேக அபிமானத்தில் மாட்டிக் கொள்வீர்கள். இதில் தான் உழைப்பு இருக்கிறது. இவ்வாறு உழைப்பு செய்து முற்றிலும் ஆத்ம அபிமானி ஆகிவிடுங்கள், அப்போது உலக அரசாட்சி கிடைக்கும்.

ஓம்சாந்தி. இங்கு 15 நிமிடம் அல்லது அரை மணிநேரம் குழந்தைகள் அமர்ந்துள்ளீர்கள், பாபாவும் 15 நிமிடம் அமரவைக்கின்றார், அதாவது தன்னைத்தான் ஆத்மா என புரிந்து தந்தையை நினைவு செய்யுங்கள். இந்த போதனை ஒருமுறை மட்டுமே கிடைக்கிறது, பிறகு ஒருபோதும் கிடைப்பதில்லை. ஆத்ம அபிமானியாக அமருங்கள் என சத்யுகத்தில் கூறுவ தில்லை. இங்கு ஒரேயொரு சத்குரு கூறுகின்றார். ஒரு சத்குரு மட்டுமே கரை சேர்ப்பவர், மற்ற அனைவரும் மூழ்கடிப்பவர்கள் எனக் கூறப்படுகிறது. இங்கு தந்தை உங்களை ஆத்ம அபிமானியாக ஆக்குகின்றார். அவரே தேகமற்றவராக இருக்கின்றார். நான் அனைத்து ஆத்மாக் களின் தந்தையாக இருக்கிறேன் என்று கூறுகின்றார். அவர் தேக மற்றவராகி தந்தையை நினைவு செய்ய வேண்டியதில்லை, இதனை புரியவைப்பதற்காகக் கூறுகின்றார். ஆதிசனாதன தேவி-தேவதை தர்மத்திற்கு உரியவர்கள் மட்டுமே நினைவு செய்வார்கள். வரிசைப் படி முயற்சியின் அனுசாரப்படி நிறைய பேர் உரியவர்கள். இது மிகவும் புரிந்துகொள்வதற்கும், புரிய வைப்பதற்குமான விசயமாகும். பரமபிதா பரமாத்மா உங்கள் அனைவருக்கும் தந்தையாக இருக்கிறார். மேலும் ஞானம் நிறைந்தவராக இருக்கிறார். ஆத்மாவில்தான் ஞானம் இருக்கிறது, உங்களுடைய ஆத்மா சம்ஸ்காரத்தை எடுத்துச் செல்கிறது. தந்தையிடம் ஏற்கனவே சம்ஸ்காரம் இருக்கிறது. அவர் தந்தையாக இருக்கிறார் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள் கின்றனர். அவரிடம் ஒரிஜினல் ஞானம் இருக்கிறது, இது அடுத்தப்படியான திறமையாகும். விதை ரூபமாக இருக்கிறார்; எவ்வாறு தந்தை உங்களுக்கு புரியவைக்கின்றாரோ, நீங்கள் பிறகு மற்றவர்களுக்குப் புரியவைக்க வேண்டும். தந்தை மனித உலகின் விதை ரூபமாக இருக்கிறார். மேலும் அவர் சத்தியமானவராக, சைத்தன்யமாக, ஞானம் நிறைந்தவராக இருக்கின்றார், அவரிடம் இந்த முழு உலக மரத்தின் ஞானம் இருக்கிறது. வேறு யாரிடமும் இந்த உலக மரத்தின் ஞானம் இல்லை. இந்த உலக மரத்தின் விதையாக தந்தை இருக்கின்றார். அவரை பரமபிதா பரமாத்மா என கூறப்படுகிறது. எவ்வாறு மாமரத்தை படைப்பவர் அந்த மரத்தின் விதை என கூறலாம், அந்த விதை மரத்தின் தந்தையாகும், ஆனாலும் அது ஜடமானது. ஒருவேளை அந்த விதை சைத்தன்யமாக இருந்தால் என் மூலமாக முழு

மரமும் எவ்வாறு வளர்ந்தது என தெரிந்திருக்கும். ஆனால் அது ஜடமான விதையாகும், அந்த விதைபூமிக்கடியில் விதைக்கப்படுகிறது. இவர் சைத்தன்யமான விதை ரூபமாக இருக்கிறார், இவர் மேலே இருக்கின்றார், நீங்களும் மாஸ்டர் விதை ரூபமாக ஆகின்றீர்கள். தந்தையிடமிருந்து உங்களுக்கு ஞானம் கிடைக்கிறது, அவர் உயர்ந்ததிலும் உயர்ந்தவராக இருக்கிறார். நீங்கள் உயர்ந்த பதவி அடைகின்றீர்கள். சொர்க்கத்திலும் உயர்ந்த பதவி வேண்டு மல்லவா? இதனை மனிதர்கள் புரிந்து கொள்ளவில்லை சொர்க்கத்தில் தேவி-தேவதைகளின் அரசாங்கம் இருக்கும். இராஜ்யத்தில் இராஜா, ராணி, பிரஜைகள், ஏழை-பணக்காரர் போன்றவர்கள் எவ்வாறு உருவாகி இருப்பார்கள், ஆதிசனாதன தேவி-தேவதா தர்மத்தின் ஸ்தபானை எப்படி ஆகின்றது யார் செய்கின்றார்கள்? பகவான். இதனை நீங்கள் இப்பொழுது அறிந்துள்ளீர்கள். தந்தை மேலும் கூறுகின்றார்! குழந்தைகளே, எதெல்லாம் நடந்ததோ அவை நாடகத்தின் படி நடந்தது. அனைத்தும் நாடகத்தின் வசத்தில் இருக்கிறது. நானும் நாடகத்தில் வசப்பட்டு இருக்கிறேன் என தந்தை கூறுகின்றார். எனக்கும் நாடகத்தில் பங்கு கிடைத்திருக்கிறது, அதன்படி நடிக் கின்றேன், அவர் சுப்ரீம் ஆத்மாவாக இருக்கிறார், அவரை தந்தை என கூறப்படுகிறது, மற்ற அனைவரும் சகோதரர்கள். வேறு யாரையும் தந்தை ஆசிரியர், குரு எனக் கூற முடியாது. இவர் தான் அனைவருக்கும் பரம தந்தையாக, ஆசிரியராக, சத்குருவாகவும் இருக்கின்றார், இந்த விசயங்களை மறக்க கூடாது. ஆனால் குழந்தைகள் மறந்து விடுகின்றனர், ஏனென்றால் முயற்சியின் வரிசைப்படி இராஜ்யம் ஸ்தாபனை ஆகின்றது. இவர்கள் தந்தையை நினைவு செய்கிறார்களா, இல்லையா? ஆத்மா அபிமானியாக இருக்கிறார்களா, இல்லையா? ஒவ்வொரு வரும் எவ்வாறு முயற்சி செய்கின்றனர் என்பதை உடனடியாக வெளிப்படையாகத் தெரிந்து கொள்ளலாம்; இவர்கள் ஞானத்தில் வேகமாகச் செல்கிறார்கள் என்பதை நடத்தையின் மூலம் புரிந்து கொள்ளலாம். தந்தை யாருக்கும் நேரடியாக சொல்வதில்லை. ஏனென்றால் வாடிப் போய்விடுவார்கள், பாபா ஏன் இப்படி கூறினார்கள்? மற்றவர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள், என வருத்தப்படுவார்கள். இவர்கள் எப்படி சேவை செய்கிறார்கள் என்பதையும் தந்தை கூறமுடியும். எல்லா ஆதாரமும் சேவையில் இருக்கிறது. தந்தையும் வந்து சேவை செய்கின்றார் அல்லவா! குழந்தைகள் தான் தந்தையை நினைவு செய்ய வேண்டும். நினைவு எனும் பாடமே கடினமானது. தந்தை ஞானம் மற்றும் யோகத்தைக் கற்பிக்கின்றார். மற்றபடி நினைவு செய்வதில் தான் தோல்வி அடைகின்றனர். தேக அபிமானம் வந்து விடுகிறது. பிறகு இது வேண்டும், இந்த நல்ல பொருள் வேண்டும் இவ்வாறு சிந்தனைகள் வருகின்றது.

நீங்கள் இங்கு வனவாசத்தில் இருக்கின்றீர்கள் என தந்தை கூறுகின்றார். நீங்கள் இப்பொழுது வானபிரஸ்த நிலைக்குச் செல்ல வேண்டும் எனவே அப்படிப்பட்ட உயர்ந்த பொருளை அணிந்து கொள்ள முடியாது. நீங்கள் வனவாசத்தில் இருக்கின்றீர்கள். ஏதாவது உலகீய பொருட்கள் இருந்தால் அவை உங்களை ஈர்க்கும், சரீரமும் ஈர்க்கும். அடிக்கடி தேக அபிமானத்தில் கொண்டுவரும். இதில் தான் உழைப்பு இருக்கிறது. உழைப்பில்லாமல் உலக அரசாட்சியை அடைய முடியாது அல்லவா! உழைப்பும் கூட முயற்சியின் வரிசைப்படி கல்ப-கல்பமாக செய்து வந்தீர்கள், செய்து வருகின்றீர்கள். ரிசல்ட் வெளிப்படையாக வெளிப்படும். பாடசாலையிலும் வரிசைப்படி வகுப்பில்

மாற்றம் ஆகின்றனர். யாரெல்லாம் நன்றாக உழைக்கின்றார்கள், யாருக்கு படிப்பில் ஆர்வம் உள்ளது என ஆசிரியர் புரிந்துகொள்வார். ஆசிரியரால் உணர முடியும். அங்கு ஒரு வகுப்பிலிருந்து இரண்டாவது வகுப்பிற்கு, பிறகு மூன்றாவது வகுப்பிற்குச் செல்வார்கள். இங்கு ஒருமுறை தான் படிக்க வேண்டும். நாளடைவில் நீங்கள் எவ்வளவு அருகாமையில் செல்வீர்களோ அந்தளவு அனைத்தும் தெரிந்து கொள்வீர்கள். இங்கு மிகவும் உழைப்பு செய்ய வேண்டும், இதனால் நிச்சயமாக உயர்ந்த பதவி அடைவீர்கள்;. சிலர் இராஜா-இராணியாக ஆகின்றனர், சிலர் வேறு விதமாகவும் ஆகின்றனர். பிரஜைகளாக நிறைய பேர் ஆகின்றனர். இவர்களுக்கு தேக அபிமானம் எவ்வளவு இருக்கிறது, இவர்களுக்கு தந்தை மீது எவ்வளவு அன்பு இருக்கிறது என நடத்தையின் மூலம் அனைத்தும் தெரிந்துவிடுகிறது. தந்தை மீது தான் அன்பு இருக்க வேண்டும் அல்லவா! சகோதரர்கள் மீது அல்ல. சகோதரர்களின் அன்பு மூலம் எதுவும் கிடைப்பதில்லை. ஒரு தந்தையிடமிருந்து தான் அனைவருக்கும் பிராப்தி கிடைத்தாக வேண்டும். குழந்தைகளே, தன்னைத் தான் ஆத்மா என புரிந்து கொண்டு என்னை நினைவு செய்வதால் உங்களுடைய பாவங்கள் நீங்கி விடும், இது தான் முக்கியமான விசயமென தந்தை கூறுகின்றார். நினைவின் மூலமாக சக்தி கிடைக்கும், நாளுக்கு நாள் பேட்டரி சார்ஜ் ஆகிவிடும், ஏனென்றால் ஞானத்தின் தாரணை ஏற்படும் அல்லவா ! ஞானம் என்ற அம்பு ஆழமாகப் பதியும். நாளுக்குநாள் உங்களுடைய முயற்சியில் வரிசைப்படி முன்னேற்றம் ஏற்படும். இங்கு ஒரேயொரு தந்தை, ஆசிரியர், சத்குருவாக இருப்பவர் மட்டுமே ஆத்ம அபிமானி ஆவதற்கான போதனை தருகின்றார், வேறு யாரும் தர முடியாது, மற்றவர்கள் தேக அபிமானியாக இருப்பதால் ஆத்ம அபிமானிக்கான ஞானம் அவர்களால் கொடுக்க முடியாது. தந்தையாக, ஆசிரியராக, குருவாக எந்த மனிதரும் ஆக முடியாது. ஒவ்வொரு வருடைய பங்கையும் தனித்தனியாக செய்வார்கள். நீங்கள் சாட்சியாக இருந்து பாருங்கள், முழு நாடகத்தையும் சாட்சியாக பாருங்கள்; நடித்தாக வேண்டும் தந்தை படைப்பவராக, இயக்குனராக, நடிப்பவராகவும் இருக்கிறார். சிவபாபா வந்து நடிக்கின்றார், அனைவருக்கும் தந்தை அல்லவா? ஆண் குழந்தைகள் மற்றும் பெண் குழந்தைகள் அனைவருக்கும் பிராப்தி தருகின்றார். ஒருவர் மட்டுமே தந்தையாக இருக்கிறார், மற்ற அனைத்து ஆத்மாக்களும் சகோதரர்கள். ஒரு தந்தையிடமிருந்து தான் பிராப்தி கிடைக்கிறது. இந்த உலகத்தைச் சேர்ந்த எந்த பொருளும் புத்தியில் நினைவு வரக் கூடாது. எதையெல்லாம் பார்க்கின்றீர்களோ, அவை அனைத்தும் அழியக் கூடியது. இப்பொழுது நீங்கள் வீட்டிற்குச் செல்ல வேண்டும்; அவர்கள் பிரம்ம லோகத்தை நினைவு செய்கின்றனர், அதாவது வீட்டை நினைவு செய்கின்றனர். பிரம்ம லோகத்தில் ஐக்கியமாகிவிடுவோம் எனப் புரிந்துள்ளனர், இதை அஞ்ஞானம் என கூறப்படு கிறது. மனிதர்கள் முக்தி-ஜீவன் முக்திக்காக எதையெல்லாம் கூறுகின்றார்களோ அவை அனைத்தும் தவறானது, அதற்கான யுக்திகளும் தவறானதாகும். ஒரு தந்தை மட்டுமே சரியான பாதையைக் கூற முடியும். நான் உங்களை நாடக அனுசாரப்படி இராஜாவுக்கெல்லாம் இராஜாவாக ஆக்குகிறேன் என தந்தை கூறுகின்றார். பாபா எங்களுடைய புத்தியில் பதிவதில்லை, எங்களுடைய புத்தியின் வாயிலை திறந்துவிடுங்கள், கருணை காட்டுங்கள் என சிலர் கூறுகின்றனர். இந்த விசயத்தில் பாபா எதுவும் செய்வதற்கில்லை என தந்தை கூறுகின்றார். நீங்கள் வழிகாட்டுதலின் படி நடப்பதே முக்கிமான

விசயமாகும். தந்தையிட மிருந்து தான் சரியான வழிகாட்டுதல் கிடைக்கிறது, மற்றபடி அனைத்து மனிதர்களின் வழி காட்டுதல் தவறானதாகும் ஏனென்றால் அனைவருக்குள்ளும் 5 விகாரங்கள் இருக்கிறதல்லவா? கீழே இறங்கி, இறங்கி தவறானவர்களாக ஆகிவிட்டனர். என்னென்ன மந்திரம், தந்திரம் செய்கின்றனர், அதனால் எந்த சுகமும் இல்லை. இவை அனைத்தும் அல்பகாலத்திற்கான சுகம் என உங்களுக்குத் தெரியும், இதையே காக்கையின் எச்சத்திற்கு சமமான சுகம் என கூறப்படு கிறது. ஏணிப்படி சித்திரம், கல்பமரத்தின் சித்திரத்தைப் பற்றியும் நன்றாகப் புரிய வைக்க வேண்டும். எந்த மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் நீங்கள் புரிய வைக்க முடியும், உங்களுடைய தர்மத்தை ஸ்தாபனை செய்தவர் இந்த நேரத்தில் வருகின்றார், கிறிஸ்து இந்த நேரத்தில் வருவார். யாரெல்லாம் வேறு தர்மத்திற்கு மாறி விட்டார்களோ அவர்களுக்கு இந்த தர்மம் மட்டுமே பிடித்திருக்கும், உடனே வந்துவிடுவார்கள். சிலருக்குப் பிடிக்கவில்லையென்றால் அவர்கள் எப்படி முயற்சி செய்வார்கள். மனிதர்கள் மனிதர்களை தூக்கில் தொங்கவிடுகின்றனர், நீங்கள் ஒரு பாபாவை மட்டுமே நினைவு செய்ய வேண்டும், இது மிகவும் இனிமையானதாகும். ஆத்மாவின் புத்தியின் தொடர்பு தந்தையின் பக்கம் இருக்கிறது. தந்தையை நினைவு செய்யுங்கள் என ஆத்மாவிற்குக் கூறப்படுகிறது. தந்தை மேலே தான் இருக்கிறார் அல்லவா! நாம் ஆத்மாக்கள், நாம் தந்தையை மட்டுமே நினைவு செய்ய வேண்டும் என்பதையும் நீங்கள் புரிந்துள்ளீர்கள். இந்த சரீரத்தை இங்கே விட்டுச் செல்ல வேண்டும். இந்த முழு ஞானமும் உங்களிடம் இருக்கிறது. நீங்கள் இங்கு அமர்ந்து என்ன செய்கின்றீர்கள்? சப்தத்தை கடந்து செல்வதற்கான முயற்சி செய்கின்றீர்கள். நீங்கள் அனைவரும் என்னிடம் வர வேண்டும் என தந்தை கூறுகின்றார். எனவே காலனுக்கெல்லாம் காலனாக ஆகிவிடுகிறார் அல்லவா! அந்த காலன் ஒருவரை அழைத்துச் செல்வார், அழைத்துச் செல்வதற்கு காலன் என்று யாருமில்லை. இவையனைத்தும் நாடகத்தில் பதிவாகி உள்ளது. ஆத்மா தானாகவே நேரப்படி சரீரத்தை விட்டுச் செல்கிறது. இங்கு தந்தை அனைத்து ஆத்மாக்களையும் அழைத்துச் செல்கிறார். ஆகவே இப்பொழுது உங்கள் அனைவருடைய புத்தியின் தொடர்பு தனது வீட்டை நோக்கி இருக்கிறது. ஆத்மா சரீரத்தை விடுவதை மரணம் என கூறுகின்றனர். சரீரம் அழிந்து விடுகிறது, ஆத்மா சென்று விடுகிறது. எனவே, பாபா எங்களை இவ்வுலகிலிருந்து அழைத்துச் செல்லுங்கள் என அழைக்கின்றனர். இங்கு நாங்கள் இருக்கக் கூடாது. நாடகத்திட்டத்தின் படி இப்பொழுது வீட்டிற்குத் திரும்ப வேண்டும். பாபா, இங்கு அளவில்லாத துக்கம் இருக்கிறது, நாங்கள் இங்கு இருக்கக் கூடாது. இது மிகவும் கெட்ட உலகம் என கூறுகின்றனர். அனைவரும் நிச்சயமாக இறக்கத் தான் வேண்டும், அனைவருக்கும் வானப்பிரஸ்த நிலையாகும். இப்பொழுது சப்தத்தை கடந்து செல்ல வேண்டும். உங்களை எந்த காலனும் சாப்பிடமாட்டார், நீங்கள் மகிழ்ச்சியாக செல்வீர்கள். சாஸ்திரத்தில் சொல்லப்பட்டதெல்லாம் பக்திமார்க்கத் திற்குரியது, இது மீண்டும் ஏற்படும். இவை நாடகத்தின் மிகப்பெரிய அதிசயமான விசயமாகும். இந்த டேப், கடிகாரம் மற்றும் எதையெல்லாம் இந்த நேரம் பார்க்கின்றீர்களோ இவையனைத்தும் மீண்டும் உருவாகும். இதில் குழப்பத்திற்கான எந்த விசயமும் இல்லை. உலக வரலாறு, பூகோளம் சுழல்கிறது எனில் மீண்டும் சுழற்சியடையும். நாம் தேவி-தேவதைகளாக ஆகிக் கொண்டிருக்கிறோம், அவர்களே மீண்டும் ஆவார்கள். இதில் துளியளவும் வித்தியாசம் ஏற்படாது. இவையனைத்தும்

புரிந்துகொள்ள வேண்டிய விசயமாகும். இவர் தான் எல்லையற்ற தந்தையாகவும், ஆசிரியராகவும், சத்குருவாகவும் இருக்கிறார் என்பதையும் நீங்கள் புரிந்துள்ளீர் கள். இவ்வாறு எந்த மனிதர்களும் இருக்க முடியாது, இவரை நீங்கள் பாபா என கூறுகின்றீர்கள், பிரஜா பிதா பிரம்மா என கூறுகின்றீர்கள், என் மூலமாக உங்களுக்கு பிராப்தி கிடைப்பதில்லை என இவரும் கூறுகின்றார். பாபு காந்திஜீ கூட பிரஜா பிதாவாக இல்லை. இந்த விசயங்களில் நீங்கள் குழப்பமடைய வேண்டாம் என தந்தை கூறுகின்றார். நாங்கள் பிரம்மாவை பகவான் அல்லது தேவாத்மா என்று கூறுவதில்லை என சொல்லுங்கள். இவருடைய பல பிறவிகளின் கடைசி நேரத்தில், வானபிரஸ்த நிலையில் முழு உலகையும் சுத்தமாக்குவதற்காக நான் இவருக்குள் பிரவேசம் செய்திருக்கிறேன் என தந்தை கூறுகின்றார். கல்ப மரத்தை காட்டுங்கள், அதில் இவர் முற்றிலும் கடைசியில் நின்று கொண்டிருக்கிறார். இப்பொழுது அனைவரும் தமோபிரதானமாக, மிகவும் வாடிப் போன நிலையில் இருக்கின்றனர் அல்லவா? இவரும் கூட தமோபிரதானமான நிலையில் அதே தோற்றத்தோடு நிற்கின்றார். இவர் உடலில் தந்தை பிரவேசம் செய்து இவருக்கு பிரம்மா என பெயர் வைக்கிறார். இல்லையெனில் பிரம்மா என்ற பெயர் எங்கிருந்து வர முடியும்? இவர் பதீதமாக இருக்கின்றார், அவர் பாவனமாக இருக்கின்றார். அந்த பாவனமான தேவாத்மா பிறகு 84 பிறவிகள் எடுத்து பதீத மனிதனாக ஆகின்றார், இவர் மனித ஆத்மாவிலிருந்து தேவாத்மாவாக ஆகக் கூடியவர். மனிதர்களை தேவதைகளாக ஆக்குவது தந்தையின் காரியமாகும். இவையனைத்தும் மிகவும் அதிசயமான, புரிந்துகொள்ள வேண்டிய விசயமாகும். இவர், ஒரு வினாடியில் அவராகவும், பிறகு அவர் 84 பிறவி எடுத்து இவராகவும் ஆகின்றனர். இவர் மீது தந்தை பிரவேசம் செய்து கற்பிக்கின்றார், நீங்களும் படிக்கின்றீர்கள். இவருடைய வம்சமாக இருக்கிறது அல்லவா? இலட்சுமி- நாரயணர், இராதா- கிருஷ்ணருடைய கோவிலும் இருக்கிறது. இராதா-கிருஷ்ணர் முதலில் இளவரசர்-இளவரசியாக இருக்கிறார்கள், அவர்களே பிறகு இலட்சுமி-நாராயணராக ஆகின்றனர் என்பது யாருக்கும் தெரியாது. இவர்கள் பெக்கரிலிருந்து (பிச்சைக்கரார்) பிரின்ஸ் ஆக (இளவரசராக) ஆவார்கள், பிரின்ஸிலிருந்து பெக்கராக ஆகின்றனர், இது புரிந்து கொள்ள எவ்வளவு சுலபமான விசயங்களாக இருக்கிறது. இந்த இரண்டு சித்திரங்களில் 84 பிறவிகளின் கதை இருக்கிறது. இவர்களே அவர்களாக ஆகின்றனர். இவர்கள் ஜோடியாக, இல்லறமார்க்கத்தில் இருப்பதால் 4 புஜங்களை காட்டியுள்ளனர். ஒரு சத்குரு மட்டுமே உங்களை கரை சேர்க்கின்றார். தந்தை எவ்வளவு நல்ல முறையில் புரிய வைக்கின்றார், பிறகு தெய்வீக குணமும் அவசிய மாகும். மனைவியைப் பற்றி கணவரிடமும், கணவரைப் பற்றி மனைவியிடமும் கேட்டால் இவர் களிடம் இந்த குறை இருக்கிறது என உடனே கூறுவார்கள், இந்த விசயத்தில் இவர் தொந்தரவு செய்கின்றார் என்றோ அல்லது நாங்கள் இருவரும் சரியாக நடந்து கொள்கிறோம் என கூறுவார்கள். சிலர் யாருக்கும் தொந்தரவு செய்யாமல், இருவரும் ஒருவருக்கொருவர் உதவி யாளராக சேர்ந்து செல்கின்றனர். சிலர் ஒருவருக்கொருவர் கீழே இறக்குவதற்கும் முயற்சி செய்கின்றனர். இங்கு சுபாவத்தை நன்றாக மாற்ற வேண்டும் என தந்தை கூறுகின்றார். அவர்கள் அனைவரும் அசுர சுபாவத்தில் இருக்கின்றனர். தேவதைகளின் சுபாவமே தெய்வீக மாகத் தான் இருக்கும். இவையனைத்தையும் நீங்கள் புரிந்துள்ளீர்கள். அசுரர்களுக்கும் தேவதை களுக்கும் சண்டை நடந்ததில்லை, பழைய உலகமும்

புதிய உலகமும் எவ்வாறு ஒன்று சேர முடியும்? கடந்த கால விசயங்களை கதைகளாக எழுதிவிட்டனர் என தந்தை கூறுகின்றார். விழாக்கள் அனைத்தும் துவாபர யுகத்திலிருந்து இங்கு தான் கொண்டாடுகின்றனர், சத்யுகத்தில் கொண்டாடப்படுவதில்லை. இவையனைத்தும் புத்தி மூலம் புரிந்து கொள்ள வேண்டிய விசயங்களாகும். தேக அபிமானத்தின் காரணமாக குழந்தைகள் நிறைய விசயங்களை மறந்து விடுகின்றனர். ஞானம் சகஜமனாது, 7 நாளில் முழு ஞானத்தையும் தாரணை செய்து விடலாம். நினைவு யாத்திரையில் முதலில் கவனம் செலுத்த வேண்டும். நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக்கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும், ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. இந்த எல்லையற்ற நாடகத்தில் நடித்துக்கொண்டே முழு நாடகத்தையும் சாட்சியாக இருந்து பார்க்க வேண்டும். இதில் குழப்பமடையக் கூடாது. இந்த உலகத்தின் எந்த பொருளை பார்த்தாலும் புத்தியில் நினைவு வரக் கூடாது.

2. தன்னுடைய அசுர சுபாவத்தை மாற்றி தெய்வீக சுபாவத்தை தாரணை செய்ய வேண்டும். ஒருவருக்கொருவர் உதவியாளராக இருக்க வேண்டும், யாரையும் தொந்தரவு செய்யக் கூடாது.

வரதானம் : தன்னுள் அனைத்து சக்திகளையும் வெளிமுகமாக அனுபவம் செய்து சர்வ சக்திகளையும் பெறுபவராகுக !

லௌகீக வாழ்வில் ஒருவரிடம் பொருள், புத்தி, உறவுகள் என இந்த சக்திகள் இருப்பதால் இது என்ன பெரிய விசயம் என்று நம்பிக்கையுடன் பெருமிதத்துடன் இருப்பார்கள். அந்த சக்தி களைக் கொண்டு பயனைப் பெறுகின்றார்கள். உங்களிடமோ அனைத்து சக்திகளும் உள்ளது. அழியாத செல்வம், புத்தி மற்றும் தொழில் இவ்வாறு அனைத்து சக்திகளும் உங்களிடம் உள்ளது. இவைகளை எல்லாம் இருப்பதாக அனுபவம் செய்தாலே தக்க சமயத்தில் விதி மூலமாக சித்திகளைப் (பயனடைந்து) பெற்று சித்தி சொரூபமாவீர்கள்.

சுலோகன்: மனதை பிரபுவின் அடமானம் எனப் புரிந்து அதனை எப்போதும் உயர்ந்த செயலில் ஈடுபடுத்துங்கள்